RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/ irjt224s222315

# கோவேறுகழுதைகள் நாவலில் வெளிப்படும் சமூகச் சிந்தனைகள்

க. சிரஞ்சீவி [அ, *], ஜோ. ஜோசப்பின் ஜூலியட் [அ]

[அ] தமிழாய்வு மையம், சாராள் தக்கர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) திருநெல்வேலி-627007, தமிழ்நாடு, இந்தியா

# Social thoughts in the novel Kovaerukaluthaigal

K. Siranjeevi [a, *], J. Joshapin Juliet [a]

[a] Department of Tamil, Sarah Tucker College, (Affliated to Manonmaniam Sundaranar University) Tirunelveli-627007, Tamil Nadu, India

* Corresponding Author: siranjeevi.sri.98@gmail.com

Received: 13-09-2022
Revised: 22-11-2022
Accepted: 30-11-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

In the novel Kovaerukaluthaigal the author charts down the internal contradictions especially between the Paraiyar and Vannar communities. Author Imaiyam's through his novels shows us how he has survived as a sociologist. When writing entered into Tamil literary prose, novels began to feature common people as protagonists. Therefore, in the continuation of the history of Tamil novels, he highlights the hierarchies, oppression and social life of the Dalit people in his novel.

**Keywords:** Kovaerukaluthaigal, Dalit, Imaiyam, Vannar

## முன்னுரை

இமையம் என்பவர் எழுதி, க்ரியா வெளியீட்டார் தயாரித்து, சுந்தரராமசாமியும் அவருடைய சுத்த இலக்கியவாதிகளும் பாராட்டி, தமிழிலேயே இதுதான் முதல் நாவல் என்று போற்றப்பட்ட நாவல்தான் கோவேறு கழுதைகள் (1994).

இலக்கியம் என்பது மனித வாழ்வின் பல்வேறு நிலைகளையும் வாழ்வியல் மாற்றங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் ஆவணக்களஞ்சியமாகும். எனவே இலக்கிய வகைகள் ஒவ்வொன்றும் அவை தோன்றிய காலத்தே வெளிப்படுத்தும் உயிரோவியங்களாகத் திகழ்கின்றன. உரைநடை இலக்கியங்களுள் ஒரு கூறாகத் திகழும் நாவல் இலக்கியம் மக்கள் வாழ்க்கையின் விளக்கமாக அமைவதுடன் சமுதாயச் சீர்திருத்தக் கருவியாகவும் செயல்படுகின்றது. இவ்வகையில் மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளையும் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களையும் எடுத்தியம்பும் புதின எழுத்தாளர்களுள் ஒருவர் தான் இமையம் என்ற புனைபெயரில் எழுதும் வெ.அண்ணாமலை. தனது முதல் புதினமான கோவேறு கழுதைகள் மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமானவர். இக்கட்டுரை இமையம் அவர்களின் கோவேறு கழுதைகள் நாவல் சித்தரிக்கும் வாழ்வியல் பொருண்மைகளை விளக்குவதாக அமைகிறது.

## சமூகப் புதினங்கள்

தமிழ் நாவல்களைச் சமூக நாவல்கள், வராற்று நாவல்கள் வட்டார நாவல்கள், துப்பறியும் நாவல்கள் உள்ளிட்ட வகைமைக்குள் பிரிக்கலாம். இவற்றுள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு

குறிப்பிட்ட இடத்தில் அமைந்த பொருளாதார சமூக நிலைகளால் தனிமனித நடத்தையில் நிகழும் மாற்றங்களைப் பற்றி அறிவிப்பனவே சமூக நாவல்கள் என்கிறார் தா.வே. வீரசாமி சமூகப் புதினங்கள் சமூகத்தையும், மக்களிடையே காணும் மாற்றங்களையும் அறிவிக்கும் காலச் சடங்குகள், மனித உறவை நேரடியாக பாதிக்கும் சமூகப் புதினம் ஒவ்வொன்றும் ஒரு நிகழ்வியல் என்கிறார் முத்துசண்முகம்.

## சமூகப் புதின எழுத்தாளர் இமையம்

இமையம் என்ற புனைப் பெயரில் எழுதும் வெ. அண்ணாமலை 1964 ஆம் ஆண்டு மார்ச் 10 தேதியில் கழுதூரில் பிறந்தார். இவர் மனைவி ச.புஷ்பவள்ளி. குழந்தைகள் கதிரவன் மற்றும் தமிழ்ச்செல்வன் இவர் சமூகம் குறித்த புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நூல்கள் என இவரெழுதியவையாகும். இவரது முதல் நாவல் கோவேறு கழுதைகள் (1994). சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற நாவலான செல்லாத பணம் ஒரு முக்கியமான நாவலாகும் (2020). குறிப்பாக, கோவேறு கழுதைகள் நாவலின் ஓரிடத்தில் சமூகத்தின் இடம்பெயர்தல் கூடாது. இந்த மண்னே நமக்கான வாழ்விடம் என்றவாறு பதிவு செய்துள்ளார். "நம்பளுக்கு முன்னாடி எம்பூட்டோ, நம்ப சாதி, சனம் இருந்துட்டுக் காலம் தள்ளினாப்பல நம்பளும் போக வேண்டியததுதான்." (Imayam, 1994)

இந்த நாவல் சாதிகளுக்கு இடையில் நிலவும் ஒடுக்குமுறையை ஒருவித வன்மத்தோடு, வித்தியாசமாகச் சொல்லுவதாகவும், கும்பலிலிருந்து ஒதுங்கி நிற்பதாகவும் பாவித்துக்கொண்டு குலைந்திருக்கிறது. முதலில் தலித் சாதிகளுக்கு இடையில் உள்ள தீண்டாமையை அகற்றுங்கள், அப்புறம்தான் அவற்றின் மீது மேற்சாதிகள் பிரயோகிக்கும் தீண்டாமையை அகற்றச் சொல்ல அவைகளுக்குத் தார்மீக உரிமை வரும் என்ற போதனையை இந்தச் சித்தாந்தம் முன் வைக்கிறது.

பற வண்ணார் படும் அவலங்களைப் பறவண்ணார் குடும்பத் தலைவி-தாய் வழியே ஒப்பாரி வடிவில் கழிவிரக்கம் தோன்றுமாறு கூறிவந்த நாவல், இந்த அவலங்கள் இனி இல்லாமல் போவதற்கான புதுக்கால மாற்றறங்களைப் பின்பற்றிச் சென்றிருக்க வேண்டும். பற வண்ணார் குடும்பத்து இளம் தலைமுறையினர் நகர்ப்புறம் பெயர்ந்து சாதி இழிவுகள் புதிய வரவுகளால் தீர்கின்றன என்பதாக இல்லை. மாறாக, இது, தாயை விட்டு விலகிய பிள்ளைகளின் மனிதாபிமானமற்ற போக்கினை உணர்த்துவதற்காகவே சுட்டப்படுகின்றது. இனிமேல் கிராமத்தில் பறவண்ணார் குடும்பத்திற்கு இழிவான அடிமைச் சேவகம் தேவைப்படவில்லை என்பது, பறவண்ணார் தாய்க்குத் தன் பாரம்பரியத்தின் இருப்பே இனித் தேவைப்படவில்லை என்று நாவல் கதைக்கிறது. நாவலுக்கு, வரலாற்றில் நிகழ்ந்து கொண்டிருக்கிற நேர்மறையான புறவய மாற்றங்கள் முக்கியமில்லை.

மனிதர்கள் சமூகவயமாகி உரையாடுகிற நிலையில் ஏற்படுகிற உறவுகள் குறிப்பிட்ட கால, இடச் சூழல்களால் வரையறுக்கப்படுகின்றன. இந்த உறவுகளுக்கு, அன்பு, நேயம், மனிதாபிமானம், வெறுப்பு, சினம், கொடுமை முதலான ஒப்பீட்டுத் தன்மை கொண்ட மதிப்பீட்டுப் பெறுமதிகள் ஏற்றப்படுகின்றன. ஒரு குடும்ப உறுப்பினர்களுக்குள் நிலவுகிற உறவுமதிப்பீடுகள் நேர்மறையானவையாகப் போற்றப்படுகிறபோது, அவையே எதிர்நிலை வகிக்கும் மற்றொரு குடும்ப உறுப்பினர்களோடு உரையாடும்போது எதிர்மறையானவையாக ஆவதும் உண்டு. இதேதான் சாதி, இனம், சமயம், தேசம் சார்ந்த மாந்தர்க்கு இடையில் எதிரெதிர் பெறுமதிகளைப் பெறுவதைத் காணலாம். அதாவது, இவை கட்டப்படுகின்றன. இவையே சாசுவதமாக ஒன்றை உணர்த்திக் கொண்டே இருப்பதில்லை. எனவே மனிதர்களுக்கிடையில் கட்டமைக்கப்படுகின்ற ஒப்பீட்டு பண்புபெற்ற இயல்புகளை இயற்கையானதாக, அருவமானதாகப் பார்ப்பது என்பது, முற்றிலும் வரலாற்றிற்கு அப்பாலிருந்து அவற்றை நிரந்தரப்படுத்தி, உறைந்து போக வைக்கிற காரியமாகும். ஒவ்வொரு தனி நபரின் குரலை ஒற்றைத் தன்மை கொண்டதாகவும், சுதந்திரமான மாற்றங்களுக்கும், தேர்வுகளுக்கும் உட்படாததாகவும் வரையறுத்து முடித்துவிடுகிற காரியமாகும்.

## கோவேறு கழுதைகள்

இமையம் 1994இல் படைத்துள்ள கோவேறு கழுதைகள் வண்ணார் மக்களின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற்றது. சமூக அநீதிகளால் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் மாறி வரும் கட்டமைப்பில் சிக்கித் திணறும் தொழில் முறை சார்ந்த ஒரு வண்ணார் குடும்பத்தின் வாழ்வியல் அனுபவங்களை விளக்குகிறது. சுதந்திர இந்தியாவில் ஒடுக்கப்பபட்டவர்களுக்குள்ளும் ஒதுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த வண்ணார் குடும்பத்தின் வாழ்வையும் இன்னல்களையும் இடர்பாடுகளையும் இந்நாவல் ஆரோக்கியம் எனும் படைப்புவழி விளக்கிக் கூறுகிறது.

## கதையமைப்பு

முதலில் இந்த நாவலின் மையமான சாதிய உறவுகள் பற்றிக் காணலாம். நாவல், ஒரு பறவண்ணார் சாதியின் சார்பாக நிலைகொண்டு தென்னார்க்காடு பகுதியின் ஒரு கிராமத்தின் சாதிய சமூக உறவுகளைச் சொல்ல முனைந்துள்ளது. பாரம்பரியமாக விவசாயத் தொழிலை மேற்கொண்ட சேர்வை, பிள்ளை, உடையார், கவுண்டர் என்கிற குடித்தனக்காரச் சாதியினர் வாழும் பகுதி ஊர், ஊர்த்தெரு என்றும் பறையர் என்ற தலித் சாதியார் வாழும் பகுதி காலனி என்றும் குறிக்கப்படுகின்றன. இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் புறம்போக்கு தரிசு நிலம் இருக்கிறது. குடித்தனச் சாதியார், பறையர், பறவண்ணார் ஆகிய மூன்று சாதியார்களும் எப்படி மேலிருந்து கீழாக ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கிறார்கள் என்பதை நாவல் தன்னுடைய தேர்வின் பிரகாரம் கூறுகிறது.

குடித்தனக்காரர்களுக்குத் துணிவெளுக்கும் குடிவண்ணார் குடித்தனக்காரர் பகுதியிலும், பறையருக்கு வெளுக்கும் பறவண்ணார் காலனித் தெருக்கோடியிலும் ஜூவிக்கிறார்கள். இந்தப் பறவண்ணார் குடும்பத்தார்கள் உயிர் வாழ, பறையர் போடும் சோற்றையும், கூழையும், தானியங்களையும் வசிப்பிடம், தொழில் ஆகியவற்றை வெகுவாக நேசிப்பவர்கள் கிராமப்புற மக்கள் எப்பொழுது என்ன நிகழும் என்றறியாத சூழலிலும் தம்மூர் மக்கள் தனக்கு பல்வேறு வகையான இன்னல்கள் தரும் சூழலிலும் பிறந்த மண்ணை அளவுக்கு அதிகமாக நேசித்து விட்டு வேறிடம் செல்ல மணமில்லாமல் அங்கயே வாழவேண்டும் என்ற மனநிலையோடு வாழும் வண்ணார் குடும்பத்தின் வாழ்வினைக் கதையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள படைப்பு கோவேறு கழுதைகள்.

குடும்பத்தலைவன் சவுரி என்றாலும் குடும்பத்தை வழிநடத்திய ஆரோக்கியம் தான். மனைவி பேச்சைக்கேட்டு மனைவியுடன் ஊரை விட்டுச் சென்ற மூத்த மகன் ஜோசப். கணவனை இழந்து விதையானவள் மகள் மேரி. ஊரைவிட்டு ஓடிவிட்ட கடைசி மகன் பீட்டர் என பல நிலையில் இருக்கும் உறுப்பினர்களைக் கொண்டது ஆரோக்கியத்தின் குடும்பம்.

தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தன் குடும்பத்திற்காகவும், தன்னுடைய ஊர்க்காகவும் உழைத்தே ஓய்ந்துபோனவள் தான் ஆரோக்கியம். ஊர் மக்களுக்காக உழைத்தே கூன் விழுந்தவன் போலிருக்கும் கணவன் சவுரி. ஊர் மக்கள் தரும் அளவுக்கதிகமான இன்னல்களை தாங்க முடியாமல் இந்த அடிமை வாழ்க்கையை வேண்டாம் என்று ஊரைவிட்டுச் சென்ற தனது இரண்டு மகன்களையும் நினைத்து வருந்திக்கொண்டே இருந்தாலும் தன்னுடைய கணவனை இழந்து குழந்தையுடன் இருக்கும் மகளை பாரமாக கருதாமல் ஊரைவிட்டு வெளி ஊர்க்குச் செல்ல மணமில்லாமல் உயிர் போகும் வரை இந்த ஊரில் தான் இருக்க வேண்டும் என நினைக்கும் ஆரோக்கியத்தின் வாழ்வினை முழுமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறது கோவேறு கழுதைகள்.

## இல்வாழ்வு

மனித வாழ்க்கைக்கு இன்றிமையததாக அமைவது இல்வாழ்வு ஆகும். இல்லறத்தை நல்லறமாக மாற்றும் திறனுடையவள் பெண். பெண் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு தான்

சார்ந்துள்ள குடுப்ப உறவுகளை காத்து வருகிறாள். நல்ல குடும்பம் என்பது கணவன், மனைவி, குழந்தைகள் என அனைவரையும் உள்ளடக்கியதாகும். வள்ளுவர், பெண் என்பவள் தன்னை தற்காத்துக்கொண்டு தான் சார்ந்திருக்கும் குடும்ப உறவுகளையும் காக்கும் பண்பினையுடைவள் என்பதனை

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

பொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறளின் வாயிலாகச் சுட்டியுள்ளார் (Puliyur Kesigan, 2009).

இதுபோல ஆரோக்கியம் நம்முன்னே மிகச் சிறந்த பெண்ணாக மிளிர்கிறாள். "ஆரோக்கியம் இல்லையென்றால் அவள் குடும்பமும் ஊரும் ஓர் அணுவும் அசையாது என்பதை அவள் கோவில் போய் வந்த மறுநாள் தான் ராமசாமி அம்மா செத்துப் போனாள். அந்த வாரத்திலேயே மும்முரமாக காற்றில் அறுவடையும் தொடங்கிவிட்டதால் களம் தூற்றுவதில் மும்முரமாய் இருந்தாள் ஆரோக்கியம்" ஒரு வகையில் ஒவ்வொரு வீட்டுக்கும் அவள் முக்கியமான உறவுக்காரி" என்ற வரிகள் விளக்குகின்றன (Imayam, 1994).

## மக்கட்பேறு

குடும்ப வாழ்விற்குப் பெருமையும் சிறுமையும் தேடித்தருபவர்கள் குழந்தைகள் இவர்களால் பெற்றோருக்கு பெருமையும் சிறுமையும் ஏற்படும். எத்தகைய நிலையிலும் தம் குழந்தைகளை உயர்வாகவே கருதுவர். இந்நாவலில் ஆரோக்கியத்தின் மூத்த மகன் மனைவியுடன் ஊரைவிட்டே சென்றுவிட்டான். இளைய மகன் ஊரைவிட்டு சென்னைக்கு ஓடிவிட்டான். மகன்களை நினைத்து ஆரோக்கியம்

"பச்சக்கிளி வளர்த்த அது

பறக்கயிலெ தப்பவிட்டன்,

குஞ்சுக்கிளி வளர்த்தன் அது

கூவயிலே தப்பவிட்டன்"

என்று புலம்புகிறாள் (Imayam, 1994).

## தொழில்

தொழில் என்பது ஒருவருடைய வாழ்வாதாரத்திற்கு வருமானம் ஈட்டக்கூடிய செயல். இதனை உத்தியோகம் அல்லது அலுவல் என்றும் கூறுவர். இந்நூலில் ஆரோக்கியத்தின் குடும்பத்தினருக்கு சம்பளமாக பணம் தரமாட்டார்கள். ஆரோக்கியம் தான் அந்த ஊரில் பல்வேறு உணவு வேலைகளை செய்து வருகிறாள் என்பதை

"இந்த ஊருல பாதிப்பேறு என் கையில தான் பொறந்ததும் வந்து விழுந்திருப்பாங்க" 5

## உணவுமுறை

மனிதன் உள்பட ஒவ்வொரு ஜீவராசியும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாததாக உணவு விதவிதமான உணவு உண்ணும் மக்களின் உணவு முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் ஆரோக்கியத்தின் குடும்பத்திற்கு வீட்டில் உணவு சமைப்பதே அரிது தான் ஊர்ச்சோறு எடுத்து வந்து தான் சாப்பிடுவார்கள் திருமணம், சடங்கு போன்ற நிகழ்வுகளில் வேலையை செய்துவிட்டு மீதமுள்ள உணவை வாங்கிவந்து சாப்பிடுவார்கள். பொங்கல், தீபாவளி பதினெட்டு என்று வந்தால் ஊர்மக்கள் எல்லார் வீட்டிலும் வேலை செய்து மீதமிருக்கும் பன்றி, ஆடு, மாட்டுத் தலைகளும்

குடல்களும் தான் ஆரோக்கியத்தின் வீட்டில் உணவாயிருக்கும். உணவுக்காக தான் அரும்பாடுபட்டனர். குறிப்பாக, ஆரோக்கியத்தின் குடும்பத்தினர்

"புள்ளென்னு பிண்டமாத் தரெயிலெ விழுந்ததிலிருந்து நாளது தேதிவரக்கும் எனக்கு வவுறே சாமியாப் போச்சீ"

"வவுறு வளக்கறதுதான் தொயிலாப் போச்சி"

"கயிதெமாரி பொதி பொதியாய் துணியைச் சொமந்தன்" (Imayam, 1994).

## முடிவுரை

மனிதர்களின் மொழி, பண்பாடு, வாழ்வு, பழக்க வழக்கங்கள் உள்ளிட்டவை நிலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றார்போல் மாறுபடுகின்றது. ஆனால், ஊரையும், ஊர்மக்கள்களையும் ஆதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் வண்ணார் குடிமக்கள் வாழுங்காலம் முழுவதும் உழைத்துத் தேய்ந்தாலும் நிறைவாக, வாழ முடியாததையும் அன்றாட தேவையை பூர்த்தி செய்வதற்கு தினம்தினம் உழைத்து மாய்ந்து போவதே வண்ணார் மக்களின் வழக்கமாக இருந்துவருகிறது. எனவே வண்ணார் சமூகத்தின் இயல்பு வாழ்க்கையில் இத்தனை ஒடுக்குமுறைகளைச் சந்தித்து வரும் இம்மக்களின் நிலையயைத் தெளிவாக வரையறுக்கிறார் நூலாசிரியர். முதலாளிய வளர்ச்சியை ஒட்டித் தோன்றி, ஒரு மேலதிகமான உறைந்து போன எதார்த்தவகை நாவலின் பாத்திரப் படைப்புகள் பலவும் தோண்டித் துருவிக் காணும் போக்கினை இந்நாவல் இலட்சியப் படுத்தியது.

## References

Imayam, (1994) Koveru kazhuthaikal, Crea Publication, Chennai, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License